அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

மலர் 2	விக்ருதிஞூ வைகாசிமீ	விலை
இதழ் 2	மே—ஜூன்—1950ஞூ	அணா 2½



சூரபத்மனுக்கு குபேரன் பணிதல்

(காந்தபுராணச் சித்திர விளக்கம்—12)

பொருளடக்கம்

			பக்கம்
1.	ஓடம்	(திருப்புகழ் மணி)	... 1
2.	பகவன் நாமப் பிரபாவம்	(N. S. இராமச்சந்திர ஐயர்)	... 5
3.	கந்தரனுபூதி	(திரு கு. தங்கவேலுத்தேவர்)	... 10
4.	வைஷ்ணவர் செல்வம்	(V. S. வெங்கடராமன்)	... 12
5.	அருணகிரி அநுபூதி	(ஸ்ரீ வத்ஸன்	... 15
6.	அமிர்த கீதம்	(P. S. வரதராஜ ஐயர்).	... 22
7.	உள்ளம் கவர் கள்வன்	(சே. போ. புவனகிரி)	... 24
8.	கந்தர் கலி வெண்பா	(ரசபதி)	... 28
9.	பக்தியும் இசையும்	(மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை)	... 35

நூதன வர்ணப் படங்கள்

சைவ சமயாசிரியர்
நால்வர் 10×14 ரூ. 1—0—0

ஸ்ரீ குமரகுருபரன்
முருகன் 14×20 ரூ. 1—4—0

ஸ்ரீ அருணகிரி நாதர் ரூ. 1—8—0

சிவதாண்டவம் ரூ. 1—8—0

புத்தகங்கள்

திருப்புகழ் மாலை
160 பாடல்கள் ரூ. 0—8—0

அருளிச்செயல் ரூ. 0—2—6

54, பந்தர் தெரு, சென்னை

ஒவ்வொரு ஆங்கில மாதம் 12-ம் தேதி அமிர்தவசனி அனுப்பப்படும். சந்தாதார்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடுவது நலம்.

சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். ஆயுள் சந்தா ரூ. 25-0-0.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை—1,

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 2	விக்ருதி ௵ வைகாசி மீ மே—ஜூன்—1950	இதழ் 2

ஓடம்

(திருப்புகழ்மணி)

சுக துக்கங்களால் நிறைந்து இன்றைக்கு மெய் போன்று நாளை வெறும் பொய்யென மறையும் இந்த உலக வாழ்வை சம்ஸார சமுத்திரம் என்பா. மெய்யறிவினால் பேதம் செறிந்த சம்ஸார சமுத்திரத்தை கடக்க வேண்டும். அதைக் கடக்கவே ஒவ்வொரு ஜீவனுக்கும் சரீரம் என்ற ஒரு ஓடத்தை சிருஷ்டி செய்து கொடுத்திருக்கிறார் ஈசன். வாழ்க்கையெனும் சமுத்திரத்தில் மனம் எனும் தோணிபற்றி உலாவியே கடக்க முயல்வான் மானிடன். இந்த ஓடம் பெறுதற்கரிய ஒரு மேன்மை பெற்ற கருவி. (life belt) அதை நன்றாய் பாதுகாத்து ரக்ஷிக்கவேண்டும். எந்த சமயமாயினும ஓடம் கவிழ்ந்து விடுமாதலால் அதை நம்பாதே என்றார். அது முக்கியமான கருவியாதலால் அதை ஒழியாதே என்றார் ஸ்ரீ அருணகிரி.

மாசூ ராதிய சினத்தர் பட்டிட வேலே லேவிய முருகோனே
மாதவ உணர்ச்சி பெற்றிட வேநீ தாளினை யருள்வாயே.

இந்த சரீரம் இருக்கும்போதேதான் உண்மை தெரிந்து ஆண்டவனுக்கும் நமக்கும் இருக்கின்ற உறவை உணர்ந்து, அந்த உணர்ச்சியை உறுதி பண்ணிக்கொள்ள வேண்டும்.

"ஓடமுள்ள போதலோ ஓடியே உலவலாம்
ஓடமுள்ள போதலோ உறுதிபண்ணிக் கொள்ளலாம்
ஓடமும் உடைந்துபோய் ஒப்பற்ற வெளிதனில்
ஆடுமில்லை கோலுமில்லை யாருமில்லை யானதே"

என்று பாடினார் சிவவாக்கியர்.

சரீரம் பெற்று அதில் மனமெனும் ஒரு பெரும் பொருளையும் பெற்றுவிட்டாய். நல்ல கப்பல் இது. ஆனால் இதை உபயோகிக்கத் தெரியாமல் கெடுகின்றார்கள் மக்கள் என்றார் ஸ்ரீ அப்பர்.

"மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றி
சினமெனும் சரக்கை யேற்றி செறிகடல் ஓடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தென்னவொணு
வுனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூருடையகோவே"

இது அப்பர் ஸ்வாமிகள் திருவாக்கு. அகங்காரத்தை ஏற்றி ஆசையெனும் பாறையில் உடலை உடைத்து அழிந்து விடுகிறார்களே! என்று துக்கிக்கின்றார்.

ஸ்ரீ கிருஷ்ணலீலை படங்களில் ஒரு படம் அற்புதம். கோபிகளெல்லாம் ஒரு ஓடம் பெற்றார்கள். தேடித் தேடி அதிலே யாரை ஏற்றிக்கொண்டு சென்றார்கள் என்றால் கண்ணனைத்தான். மற்றவரெல்லாம் அவன் பக்தர்கள் கோபிகளேதான். அவ்வாறு மனமெனும் ஓடத்தில் ஆண்டவனை முருகனை ஏற்றுங்கள். சினத்தை ஏற்றவேண்டாம். என்று உபதேசிக்கின்றார்.

மகாபிணி மேலிட முடக்கி வெட்கு மதாமத வீணனை
மீளற் பொலிப்பத மோடுற வேயருள் புரிவாயே.

"நிலையாத சமுத்திரமான,
சமுஸாரத் துறைக்கணில் மூழ்கி
நிஜமான தெனப்பல பேசி
அதனூடே நெடுநாளு முழைப்புளதாகி
பெரியோர்க ளிடைக்கரவாகி
நினைவால் நின் அடித்தொழில் பேணி-துதியாமல்
தலையான உடற்பிணி யூறி
பவநோயி னலைப்பலவேகி,
சலமான பயித்தியமாகி-தடுமாறி
தவியாமல் பிறப்பையும் நாடி
அதுவேரை அறுத்துனையோதி
படிமீதில் துதித்துடன்வாழ-அருள்வாயே"

என்று பாடினர் ஸ்ரீ அருணகிரிநாதர். துதியால் ஏத்தி, பிறப்பால் பிறப்பின் வேரை அறுத்து வாழுங்கள் என்றார்.

முருகனை வாழ்த்த வாழ்த்த "நரம்பால் பொதிந்த" இந்த உடலம் எனும் பொதி, ஒரு நல்ல ஓடம்போல் ஆகி விடுகின்றது. சம்ஸார சமுத்திரத்தில் நாம் மிதந்து கொண்டே கடந்திடல் வேண்டும். மூழ்கிவிட்டால் மாண்டு விடுவோம். மிதக்க முடியாமல் நம்மை உள்ளே ஆழ்த்து கின்றது. மனம் எனும் கற்பாறை ஒன்றை கட்டியல்லவோ நம்மை கடலில் பாய்ச்சி இருக்கின்றது. மனமெனும் கற் பாறை மிதக்கச் செய்யவேண்டின், சினமெனும் சுரக்கை கீழே தள்ளிவிட்டு, ஈசன் நாமத்தை சொல்லி ஏத்தினல், கற்பாறையும் மிதக்கும்படி ஆய்விடும் அற்புதத்தைக் காண லாம். இந்த சூக்ஷமத்தை அப்பர் சரித்திரத்தால் உப தேசிக்கின்றார் உலகுக்கு.

சொற்றுணை வேதியன் ஜோதிவானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக்கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

கருப்பெருங் கடலது கடக்கவுன் திருவடி
கனைத்தருந் திருவுள மினியாமோ.

அற்புதமான தேவாரம். அதுவும் ஓர் அற்புதத்தை தெரிவிக்கின்றது. கவலையென்ற கனம் நீங்கி, இலேசான மரக்கட்டைபோல் சுலபமாகவே உலக வாழ்வெனும் சமுத்திரத்தைத் தாண்டி சேர்ந்துவிடலாம்—எங்கே? முருகன் பாதாரவிந்தத்தில்.

காயிலாத சோலையில் கனியுகந்த வண்டுகாள்
ஈயிலாத தேனையுண்டு இராப்பகல் உறங்குநீர்
பாயிலாத கப்பலேறி அக்கரைப் படுமுனே
வாயினாலுரைப்பதெங்கள் உண்மைஞான மோனமே

என்பர் சிவவாக்கியர். ஞானப்பேரின்பமே சென்று அடைவோம். முருகன் பாதத்தில் அக்கரை விழுந்து விட்டால் போதும், சம்ஸார சமுத்திரத்தின் அக்கரை சேர்ந்து விட்டோம் என்று கொள்ளலாம். சீர்பாத வகுப்பில் முருகன் பாதத்தையே ஓடம் என்று கூறிவிட்டார். அடியார்களை அக்கரைக்கே வாங்கி சேர்க்கும் தோணி முருகன் சரணமாம்.

"உறவுமுறை மனைவிமக ளெனுமலையில்
எனதிதய மலினபவ ஜலராசி ஏறவிடும்
உறுபுணை (யும்) அரிமுகமே......"

என்றார் முருகன் சீர்பாதத்தை ஸ்ரீ சங்கராசாரியாள் அம்பாள் பாதத்தை "போதம்" என்று வகுத்ததையும் மனத்தில் கொள்ளும தருணம்.

முருகன் நாமமே ஓடம். மனம் கல்லாய் இருந்தாலும், முருகன் நாமம் பெருத்த வசனமானதால் மனககல்லையும் மிதக்கச் செய்துவிடும. பேதமெனும் சம்ஸார சமுதகிரத்தைத் தாண்டி மனோரதமான அனுபூதியை அடைந்தே வாழ்வார் முருக நாம ஓடத்தை நாவில் ஓட்டத் தெரிந்த பெருந்தொண்டர்.

முருகா முருகா நின் தொண்டர் கூட்டம் வாழி-நீடூழிவாழி

காதலுட னேதுமடி யார்களுட னடியோரு
காலமுருக வேலெனவு மருள்தாராய்.

பகவன் நாமப் பிரபாவம்

[என். எஸ். இராமச்சந்திர ஐயர், ஆனைமலை ரோட்]

உலகில் மாந்தர் பல்வகைத் துன்பங்கட்காளாகின்றனர். உயிர் வழியாக வருந்துன்பம், தெய்வத்தால் வருந்துன்பம், உடம்பு வாயாக வருந்துன்பம் எனத் துன்பம் மூன்று வகைத்தாம். இம்மூவிதத் துன்பங்களினின்று விடுதலையடையவும், நிலையான இன்பப் பேற்றுப் பெறவும், உலகமானது க்ஷேமத்தோடு விளங்கி வரவும் நம் முன்னோர் ஒரு எளிய வழியைத் தங்கள் சுயானுபவத்தால் கண்டுபிடித்து அதன் அன்புமேலீட்டினால் வெளியிட்டுள்ளார்கள். அஃது யாதெனில் பகவன் நாமோச்சாரண ஸாதகமேயாகும்.

சத்திய யுகத்தில் தியானம் செய்வதாலும், திரேதா யுகத்தில் வேள்விகளாலும், துவாபரயுகத்தில் பூஜாதி பரிசர்யைகளாலும எதனை அடையவியலுமோ. அதனை யிக்கலியுகத்தில் நாமகீர்த்தனம், ஜபம் முதலியவற்றால் சுலபமாய்ப் பெறக்கூடுமென ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது

"க்ருதே யத்த்யாயதோ விஷ்ணும்,
த்ரேதாயாம் யஜதோ மகை:
த்வாபரே பரிசர்யாயாம்
கலௌ தத்தரி கீர்த்தனாத்"

இவ்வழி மிகவும் சுலபமாயிருத்தலால் இதன் மகத்துவத்தை பலர் உணராமற் போகின்றனர். ஏதோ ஒரு நாமத்தைத் திருப்பித் திருப்பிக் கூறுவதனால் மஹா

சீலமனைத்து மொழிந்து காமவி தத்தி லழுந்தி
தேறாத வத்தை யிழந்து தீகிவேனே.

பாவங்களெல்லாம் விலகிப் பரமானந்தம் ஏற்படும் என்பதனை நம்ப முடியாமல் சிலர் இருக்கின்றனர்; கல்விச் செருக்கினாலும் சிலர் இதனைக் கண்யப்படுத்துவதில்லை. மேல்நாட்டுக் கல்வி பயின்றவர்களில் பலர் இதனை மூட நம்பிக்கையென்றும் மொழிந்து எள்ளி நகையாடத் தலைப்படுகின்றனர். சிற்சில வேதாந்திகள் நாமோச்சாரணம், பஜனம் முதலியன மந்தாதிகாரிகளுக்கே ஏற்றவையெனச் சொல்லுகின்றனர். சமுதாய சேவை புரிவோர்களிற் சிலர் இம்மார்க்கத்தை வீண்காலக்ஷேப மென்றும் இதனைவிடக் கிராமமுன்னேற்றத்திற்குப் பாடுபடுவதே சாலச்சிறந்த தென்றும் சாற்றுகின்றனர். மனப்பான்மை பலதிறப் பட்டது.

ஆனால் நாமகீர்த்தன நெறியைக் கடைப் பிடித் தொழுகுவோர் இத்தகைய கூற்றுக்களால் உள்ளங் கலங்காதிருக்கவேண்டும். ஜப மார்க்கத்தை அனுஷ்டித் துப்பார்த்து அதன் பயனைச் சற்றும் உணராதார் கூறும் கூற்றுக்களால் அன்பர்கள் ஏன் மனக்கலக்கமுறவேண்டும்? அநுபவித்தறியாத விஷயங்களைப்பற்றி ஒருவர் பேசுவதற்கே அதிகாரியல்ல. அன்னவர் பேசுவதெல்லாம் மலடி பிரசவ நோவைப் பற்றிப் பிதற்றுதலுக்கு அனையது என்று இருக்கவேண்டுமே தவிர யுக்திவாதங்களில் இறங்கி விடக்கூடாது.

மந்திர சாதனை, நாமபஜனம் முதலிய வழிகளில் தற்காலம் ஈடுபட்டிருக்கும் மஹான்கள் தத்தம் ஸ்வானுபவங்களை அமிர்தவசனியின் வாயிலாக வெளியிட்டுக் கொள்ளும்படி அன்னாரைப் பணிவுடன் கேட்டுக் கொள்

வாஸ ரவிக்கிர ணங்க ளாமென உற்றப தங்கள்
மாயை தொலைத்திட உன்ற னருள்தாராய்!

கின்றேன். இவ்வெளியீடுகள் ஆரம்ப நிலையிலிருக்கும் அப்பியாசிகளுக்கு மிக்க நன்மையைத் தரும்.

பண்டைய முனிவர்களும், பக்தர்களும் ஜீவர்களின் மீதுள்ள இரக்கத்தால் நாமோச்சாரணத்தின் மகாத்மியத்தையும், லாகவத்தையும், வெளிப்படையாகக் கூறினர். பொருளீட்டும் நோக்கமாவது, தன்னலங்கருதும் தன்மையாவது, பதவி மோகமாவது அவரிடமிருந்ததில்லை. யாதொருவிதமான பயனையும் அறியாத ஒரு மார்க்கத்தை உலகத்தாருக்கு எடுத்தோதி அதனை அனைவரும் பின்பற்றுமாறு வற்புறுத்துவதில் ஜிதேந்திரியர்களான தவச்செல்வர்கள் முனைவார்களா? ஸ்ரீ வேதவியாசர், சுகதேவர், ஸ்ரீ நாரதர் முதலிய மஹரிஷிகள் உலக நன்மைக்காகவே நம் தேசத்தில் அவதரித்துப் பற்பல ஹிதோபதேசங்களைப் புராண, இதிஹாஸ வாயிலாகப் புகட்டியுள்ளனர். எல்லாப் புராணங்களிலும் நாமத்தின் மஹிமை நன்கு விளக்கப்பட்டுள்ளது. நாமோச்சாரணத்தால் சர்வ பாவங்களும் விரைவில் ஒழியும். சாதகனுக்கு எல்லாவித நன்மையும் சேருமென்பதுதான் புராண வாயிலாகத் தெரியும் உண்மை. இதனாற்றான் புராணங்கள் ஒவ்வொன்றிலும் அநேக ஸ்தோத்திரங்களும், ஸஹஸ்ரநாமங்களும் மலிந்து கிடக்கின்றன.

நாமப் பிரபாவத்தை நம் நாட்டில் தோன்றியுள்ள ஆழ்வார்கள், நாயன்மார்கள், மஹா பக்தர்களாகிய நக்கீரர், அருணகிரியார் இன்னும் வட நாட்டில் தோன்றிய ஸ்ரீ கிருஷ்ண சைதந்யர், கபீர்தாஸர், துளஸீதாஸர், மீராபாய், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர்

மறையால் மிக்கருள் பெறவே அற்புத
மதுமாலைப்பதம் அருள்வாயே.

முதலிய பெரியார்கள் தத்தம் அரிய சாதனைகளால் உணர்ந்து உலகத்தார் உய்யும்பொருட்டு நாமஜப கீர்த்தனங்களைச் செய்துவர ஆர்வமுடன் உபதேசம் செய்திருக்கின்றனர்.

"குலந்தரும் செல்வந் தந்திடும்
அடியார் படுதுயர் ஆயினவெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லைநான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்."

எனத் திருமங்கையாழ்வாரும்

"சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே"

எனத் திருமூலரும்

"அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா வென் றோதுவார் முன்"

என நக்கீரரும்

"முடியாப் பிறவிக்கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியார் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமா ளவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாடிரு நாமம் புகல்பவரே"

என ஸ்ரீ அருணகிரிநாதஸ்வாமிகளும்

சிந்தை யங்குலம் புகுந்து சந்ததம் புகழ்ந்து உணர்ந்து
செம்பதம் பணிந்தி ரென்று மொழிவரயே.

'கரத்தினைத் தட்டுஞ் சத்தம் காதினிற் பட்ட காலை
மரத்தினிற் றங்கும் புட்கள் மரத்தைவிட் டகலுமாப்போல்
பரத்தினின் நாமந் தன்னைப் பரிவுடன் பாடும் போது
பறந்திடு முடம்பை விட்டே பண்ணின பாவம் தானே"

என ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸரும்

"சொற்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சக்தி நிறைந்துள்ளது. திருநாமம் சித்தத்தைத் திருத்தியமைக்கும். அஃது மனத்தின் கண் படிந்துள்ள கெட்ட ஸம்ஸ்காரங்களை அறவே அழித்துவிடும் அதற்குச் சந்தேகம் சற்றுமில்லை. ஆகையால், ஓ சந்தேகிகளே, விஞ்ஞானக் கல்வி கற்ற நாஸ்திகர்களே, விழிமின், அவன் நாமங்களை மொழிமின்! இடைவிடாது நாமகீர்த்தனம் செய்மின்." என்று ஹ்ருஷீகேசம் **சுவாமி சிவானந்த ஸரஸ்வதியும்**

"நாமம் ப்ரஹ்மமேதான். நாமத்தை ஓதுமின்.
ஓதுங்கால் உளவாகும் ஒலியினின் மனதினைப் புகுத்
துமின். மனோலயம் தானே வந்தெய்தும்"

என **ஆனந்தாச்ரமம் ஸ்வாமி ராமதாஸரும்** கூறியுள்ளனர்.

ஆகையால் இப்பெரியார்களின் பொன் மொழிகளில் பூரண நம்பிக்கை வைத்து நாம் அனைவரும் உலக க்ஷேமத்திற்காகவும், ஆன்மலாபத்திற்காகவும் ஆண்டவன் நாமங்களை அநுதினம் பாடும் பணியினைக் கொள்வோமாக.

"ஊனினை உருக்கிடும் முருகா வெனும் நாமம்
தேனினைச் சொரிந்திடும் முருகா வெனும் நாமம்
ஊழ்வினை களைந்திடும் முருகா வெனும் நாமம்
வாழ்பத மளித்திடும் முருகா வெனும் நாமம்."

— ஓம் தத்சத் ஸ்ரீ குமாரார்ப்பணமஸ்து —

அலர்தர வடியேன் உறவாய் மருவோர்
அழியா வரமே தருவாயே.

கந்தரனுபூதி

[திரு. கு. தங்கவேலுத்தேவர், அம்பராம்பாளையம்,
புள்ளாச்சித் தாலூகா.]

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

(இ - ன்) முருகா, சுரபூபதியே - இளமையும் தேவலோகாதிபத்தியமுங் கொண்ட ஏ குருநாதா! உல்லாச - சந்தோஷ மிகுதியுடையவனே! நிராகுல - சஞ்சலமில்லாதவனே! யோகவிதச் சல்லாபவிநோதனு நீயலையோ - யோக சாஸ்திரங்களின் வேறுபாடுகளை ஐயந்திரிபற விளங்கச் சந்தோஷமாகப பேசி ஆச்சரியப்படும்படி செய்யவல்ல தன்மை கொண்டவனும் நீயல்லவா, எல்லா மறவென்னையிழந்த நலம சொல்லாய் - ஸர்வ பற்றுக்களையும் என்னையும் இழந்து விட்டதால் உண்டான நன்மையையும் எனக்குத் தெரியும்படி சொல்வாயாக என்பதாம்—

ஸ்ரீ அருணகிரி நாதர் இவ்வனுபூதியால் உபதேச ரகசியம்:- மேதாநாடி மேலோங்க வேண்டும் என்பதும் அவ்வாறு மேலோங்க வேண்டுமாயின், பிரமசரியமும், சோம்பலின்மையும் இன்றியமையாதவை யென்பதும் தனக்கு எவ்வாறு உதவியது என்பதை விளக்குகிறார்.

எல்லா மறவென்னை யிழந்த நலம் — மேதா நாடி மேலோங்க பிரமசரியம், சோம்பலின்மை தோன்றாத் துணைகளாகவுள்ளன வென்ற சிந்தனையால் மயில், வேல், சேவல் என்பதாகச் சிந்தித்தலுடனே பலவித உலக விவ

கோபம் மற்று மற்று மந்த மோகம் அற்று உனைப் பணிந்து
- கூடுதற்கு முத்தி என்று தருவாயே.

காரங்களில் ஈடுபட்டிருந்தும் ஜனன சாகரத்தில் கட்டுண்ட ஜீவர்களை வாட்டுகின்ற விருப்பு, வெறுப்பு என்ற பற்றுக் களும் இதுகளின் மூலகாரணமாகிய நான் என்னும் அகங் காரமும் நித்திரையில் உள்ளவன் கையில் உள்ள பொருள் நீங்குவதுபோல என்னையறியாது நீங்கி விட்ட மாத்திரம் உண்டான நன்மையானது உல்லாச - ஆனந்த நிலையும், நிராகுல - சஞ்சலமில்லாத்தன்மையும், யோக விதச் சல்லாபம் - (ஆனந்த நிலைக்குச் செல்லும் வகைகளைச் சொல்லக்கூடிய) யோக சாஸ்திரங்களில் உள்ள வேறுபாடு களை ஐயந்திரிபுகளைக் களைந்து பேசவல்ல நுண்ணறிவும் விநோதனும் - (இன்னும் மனம், வாக்கு, காயங்களுக்கு எட்டாத) அநேக திருவிளையாடலைச் செய்யவல்லவனு மாகிய தன்மையை ஆராயின், நீயலையோ - சர்வமும் நீயாகவே யிருக்கின்றாய், முருகு - ஆ - இளமையும் புதுமையுமாக விருக்கின்றதே என்ன ஆச்சரியம், சுரபூ பதியே சொல்லாய் - தேவலோகாதிபத்தியங் கொண்ட ஏ - குருநாதா! இதன் ரகசியத்தை அடியேன் தெரியும் படி சொல்லியருள்வாய் என்பதாம்.

இன்னும் அருணகிரியார் ஆனந்த நிலையெய்த ஒருவித முயற்சியும் வேண்டியதில்லை என்ற விஷயத்தை வாக்கினால் சொல்லாமல் விளக்கவேண்டும் என்பது கருதி 'எல்லாமற வென்னை யிழந்த' என்றார். பின்னும் ஜீவர்கள் தன்னிடத்து அடிக்கடி தோன்றி மறையும் இதர குணங்கள் நின்ற மாத்திரம் உண்டாயது ஆனந்த நலம் என்பது தோன்ற நலம் என்றார் அவ்வாறு நிலை பெற்ற ஆனந்த நிலைக்கு மேல் வேறு நிலையில்லை யென்பார். உல்லாச என்றார்.

சரண மெனப் பற்றும் பேதையேன் மிசை
விழியருள் வைத்துக் குன்றுத வாழ்வையும் அருள்வாயே

ஜீவர்களின் சாதாரண நிலையே வியாகூல மில்லாதது என்பது தோன்ற நிராகுல என்றார். இவ்வநுபூதி மார்க்கத்தில் செல்பவரே எளிதில் ஞானபூதர உச்சியை அடைந்து அந்நிலைக்கு வரும் வழிகள் பூராவிலும் உள்ள வேறுபாடுகளும் பிரயாசமும் எளிதில் தெரிந்து உள்ளபடி சொல்ல முடியும் என்பது தோன்ற யோகவிதச் சல்லாப விநோதன் என்றார். இவ்வளவு குணங்களும் ஒருங்கே அமைவது பரம்பொருளுக்கேயன்றி ஏனையோர்க்கு இல்லையென்பதும், அதுவும தானே என்பது தோன்ற நீயலையோ என்றார். தான் அடைந்த ஆனந்த நிலையின் புதுமையும் இளமையும் எக்காலத்தும் கண்டதும் கேட்டதும் இல்லை என்பது தோன்ற முருகு - ஆ - என்றார். இவ்வளவும் மனத்தூய்மையுடையார்க்கே அறிய முடியும் என்பது தோன்ற சுரபூபதியே சொல்லாய் என்றார்.

திருப்புகழில் திருச்செந்தூர் 'மூளும் வினைசேர' என்ற புகழும் தத்வமசியென்ற மகாவாக்கியத்தின் லக்ஷியார்த்தமும், திருச்சிராமலை 'வாசித்துக் காணொணாதது' என்ற புகழும் ஈண்டு கவனிக்கற்பாலது.

அறுமுகனடியார் அன்புநிலை வாழ்க

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

13-ஆம் பை

V. S. வேங்கடராமன்

முன் கதைச் சுருக்கம் (சித்திர பாகவதம்)

" பெரிய உரல் உருட்டி அவன் முன்னர் வைத்துப்
பிரமனுடன் உலகு தந்த பெரியோன் தன்னை,

எமபடரை மோது மோன வுரையிலுப தேசவானை
யெனது பகை தீர நீயும் அருள்வாயே.

அரிய தவஞ் செய்து மகிழ் அசோதை நங்கை
அழகியநல் கயிற்றையவன் மருங்கில் சேர்ப்ப
இருவிரல் மாத்திரம் போதா தாகப் பின்னர்
இடையர் மனைத்தாம்பெல்லாம் எடுத்துக் கட்டத்,
திருமகன் தன் இடைக்கு அதுவும் போதா தாகத்,
திகைத்தனள் வந்து உரோகிணியுஞ் சிரித்து நின்றாள்.".

என்ற அருளாளதாசரது செய்யுளைப் படித்ததுமே யசோதை கண்ணனைக் கட்ட முடியாது திகைப்பதனையும், உரோகினி எதிரில் வந்து சிரித்துக்கொண்டே நிற்பதையும் படத்தில் பார்க்கிறது போலவே சித்திர பாகவதத்தைப் பார்த்து மிக மகிழ்கின்றோம்.

"நித்ய முக்தன் பத்தனால் வியப்புத்தானே" இந்த வியப்பை அருளாளதாசர் செய்யுளிற் காட்டுகிறார். பாருங்கள்.

அரிவையர்கள் மிக நகைக்க அசோதை நங்கை
ஆயர்மனைத் தாம்பெல்லாம் முடித்தொன்றாக்கிக்,
கரியவனைக் கட்டுதலும் போதாதாகிக்
கை சலித்து மெய்வேர்வு சொரியக் கண்டு
வரையினமர் யோகிகட்கும் மறைநாலுக்கும்
வானவர்க்கும் வாசவற்கும், மலரின் வந்த,
பிரமனுக்கும் அகப்படாமப் பெரியோன்
தாய்கைத் தாம்பினால் உலூகலத்தில் பிணிப்புண்டானால்.

(அரிவையர்=இடைக்குலப் பெண்கள். வேர்வு= வேர்வை. வரை=மலை, வாசவன்=தேவேந்திரன்.)

கொண்டுவந்து கட்டின கயிறு எல்லாம் இருவிரல் குறைந்தனவாக யசோதையின் கைகள் சலித்துப் போவதையும், யசோதையின் உடம்பிலே வேர்வை ஊற்று வதையும் அருளாளதாசர்,

---

பெரிய மட மேவிய சுகத்தனே யோக்யர் பெருமானே
தலை யறிவி லேனைநெறி நிற்க நீ நிகைஷ தரவேணும்.

"கைசலித்து மெய்வேர்வு சொரிய" என்று படிப் போர்க்கு உணர்ச்சி பெருகச் சித்திரத்திலுங் காட்ட முடியாத - (ஒருவிதம் காட்டலாம்) அந்த வேர்வை நீர் யசோதை உடம்பில் முத்தென அரும்பி வடிவதாகக் கண் கொண்டு காண வைக்கிறார்.

கட்டுப்படாதவன் கட்டுப்பட்டான்

சிறையினிற்றப்பி யோடினூர் பிடிபட்டால் ஆனந்தம்
விலங்குக்கே இடங்கொடாதவர் விலங்குமாட்ட [தானே
இடங்கொடுத்தால் களிப்புத்தானே.
கட்டுக்கு அகப்படாப் பெரியோன்
கண்ணனுவதை இங்குக் காண்கிறோம்.
வரையின் அமர்யோகிகட்கும் அகப்படாப் பெரியோன்.
" காடு பற்றியும் கனவரைப்பற்றியும், கலைத் தோல்
மூடி முற்றியும், முண்டித்தும், நீட்டியும்,"

என்று கம்பன் சொல்லுகிறது போல, மலையில் அமர்ந்த யோகிகளுக்கும் அகப்படாதவனும் கண்ணன். இது தவிர, வரையினமர் யோகிகள் என்ற இச் சொற்றொடர், கைலாச பதியாகிய புலித் தோலாடைப் பரமசிவ பகவத் பாதாள் என்ற பொருளையும் தரும்.

பிறர் செய்யும் தவங்களுக்குப் பலன்களை அளித் தருளும் பரமசிவன், கத்தூரிமான் உலாவுகின்றதும் - கங்கை யருவி வீழ்கின்றதும் ஆன இமாலய மலையில் எண் ணூறு வருடம் என்ற கணக்கின்படி எத்தனையோ தடவை எதனையோ மனத்திற் கொண்டு தவம் புரிந்தார் என்ப தும் புரிகின்றார் என்பதும் நூல்களிற் கண்ட மெய்ப் பொருள்கள். காளிதாஸனும் "கேனுபி காமேன தப சசார" என்று தொண்டையைவிட்டு உரைத்தான். அவ்

படிமன துளது பரிபுர சரண
பாதார விந்த நினையாதோ.

வரையினமற் யோகிகள் உருத்திரர் திரிநேத்திரர், திரிபுராந்தகர், அப்படிப்பட்ட சிவனுக்கும் அகப்படாப் பெரியோன் கண்ணன் என்றார்.

மறைநாலுக்கும், வானவர்க்கும்,
கண்ணனையறிய முடிவது எங்ஙனம்.
சிவபிரானே அறிய முடியாது தவிக்கிறாரே.

வாசவற்கும் அகப்படாப் பெரியோன் என்று சொன்னார், இந்திரன்தான் அவன். மகேந்திரன்தான். நூறு அசுவமேத யாகங்கள் செய்தவன்தான். சுர நாயகன்தான் அவன். அவனுக்கும் அகப்படாதவன் கண்ணன்.

மலரின் வந்த பிரமனுக்கும் அகப்படாப் பெரியோன், தந்தை வேறுதான். மகன் வேறுதான். தந்தையினும் மகன் தாழ்ந்தவன்தானே. பிரமன்—சுயம்பு - சதுரானனன். வேதாப்பியாச சடன் பெரிய மாந்திரிகன் அவனுக்கும் அகப்படாப் பெரியோன் கண்ணன் என்றார். அன்னையின் வேர்வையை அப்படிப்பட்ட கண்ணன் கண்டதும் அருள் சுரந்து தாய் கைத் தாம்பு மணிக் கயிற்றால் வெறும் உரலிலே பிணிப்பு உண்டு கட்டுப்பட்டான். விரும்பினால் தூணையும் பிளப்போன் ஆவன். தூணைப் பிளந்து வெளி வந்தவன் உரலில் கட்டுண்டது வியப்பே. அன்பல்லவோ அக் கண்ணனைக் கட்டிற்று. (தொடரும்.)

அருணகிரி அனுபூதி

(ஸ்ரீவத்ஸன்)

அனுபூதி என்ற சொல்லுக்கு, சுகம் துக்கம் என்னும் இருமைகளை அனுபவித்தல், அவற்றினைத் தன்னுள் உணர்ந்து அறிதல் எனப் பொருள்.

ஆதாரத்து ஒளியானே, ஆரூரிற் பெருமானே
மாதானத்த னமாக மாஞானக் கழல் தாராய்.

வேதாந்த சாஸ்திரங்களாகிய சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம், பூர்வமீமாம்சம் (கர்ம காண்டம் உத்தரமீமாம்சம் (ஞான காண்டம்) இவற்றுள் "நியாய" வாதிகள் கூறுவதாவது, ஓர் பொருளை நேரில் பார்த்தல் (Direct perception), அஃதினை அப்பியசித்து அனுபவித்தல் (Experience), தாரதம்மியமிட்டு உணர்தல் (Comparison), பிறகு முடிவாக ஓர்வித நிச்சயத்துக்கு வருதல் (Inference) ஆகிய இத்தகைய நான்கு வகைப் பட்ட அனுபவத்தின் (சுவானுபவத்தின்) பின்னர் ஏற்படக் கூடிய உண்மை அறிவே (Pure Truth knowledge) அனுபூதி நிலை என்கிறார்கள்.

அவ்வாறே நமது அருணகிரியாரும் மேற்கண்ட வகைகளென்ன, மற்றும் தாமாகவே பிரத்யேகமாகக் கண்டதுமான, அனுபவங்கள், அப்பியாசங்கள், பழக்கங் கள், உண்மைகள் என்ன, இவற்றினையே தூய சூக்குமக் கருத்துக்கள் மலிந்து கிடக்கக் கூறியுள்ளார், இவ்வனுபூதி வாயிலாக என்னலாம்.

நிற்க, இவர் தாம் கண்ட உண்மைகளை விவரிக்க முற் படும் இந்நூலுக்கு " அருணகிரி அனுபூதி " என்றோ, அல்லது அடைமொழியின்றி தனித்து அனுபூதி என்றோ கூறாமல் " கந்தர் அனுபூதி " எனக் கூறியதின் நோக்கம் தான் யாது?

1 தாம் கண்ட அவ்வளவு சிறிய அனுபவங்களும் கந்தரையே சார்ந்தது என்றோ,—அல்லது

2 தாம் இயற்றிய அனுபூதியில் கூறிய வகைப்படி யெல்லாம் கண்டு அறிந்து உணர்ந்தது அக் கந்தரைத் தான் என்றோ—அல்லது

வட விஜயபுரந்தனில் மேவிய பெருமானே
நின் அழகிய தண்டைவிடாமலர் அடைவேனே.

3 தாம் அதுவரையில் கந்தரது புகழ், பூசை, அலங்காரம், வகுப்பு முதலியவற்றினைப் பாடியிருந்தும் கந்தரைத் தம் முன்னே உணர்ந்து, அறிந்து ஐக்கிய நிலையென்னும் யோகநிலையை யடையாமலிருந்து, பிறகு பலவித அனுபவங்களின் காரணமாக அத்தகைய உண்மை நிலையைத் தமது குருநாதனுகிய ஸ்ரீ கந்தரின் அருளினுலேயே அறியப்பெற்று, பிறகு அந் நிலையைப் பற்றிய விவரணத்தைத் தம் குருநாதன் பெயரையிட்டு கந்தர் அனுபூதி எனக் கூறுவதே முறையெனக் கருதியோ—அல்லது

4 கருவிகளைக் கட்டறுத்துக் கந்தன் என்ற
பேருங் கொண்டார்— (சு. ஞானம் 200)

என்ற வாக்குப்படி இவ்வுடலின்கண் உள்ள தத்துவங்கள் தொண்ணூற்றையும் சுட்டெரித்து உண்மை நிலை என்னும் சைதன்னிய நிலையை அடைபவர்க்கே "கந்தர்" என்னும் சொல் உரித்தானதால், நமது அருணகிரியாரும், அவ்வாறே தாமும் தமது யோக அப்பியாசம் அல்லது யோகப் பழக்கம் காரணமாக தமது "ஆணவம், கன்மம், மாயை" என்னும் மும் மலங்களையும் களைந்து தத்துவங்களையும் கடந்து மேலான நிலையை யடைந்ததினுல் தாமும் "கந்தர்" ஆனுர் என்பதைக் குறிப்பிடவோ—அல்லது

குறிப்பு :—ஆகமங்களிலும் உபநிடதங்களிலும் கண்டபடி, மானிடர்கள் யாவர்களும, தத்தம் ஆணவம், கன்மம், மாயைகளைக் களைய வேண்டிப் பிரார்த்தித்து தத்தம் உடலில் பன்னிரண்டு தலங்களில் விபூதி தரிக்க வேண்டும் என்றும்

சீர்பாத மேகவலே யாயுமுள வேதீதமு
நாதாகு மாரமுருகா எனவும் ஓத அருள் புரிவாயே.

அங்ஙனம் தரிப்பது தர்சனை, மத்திமம், பௌத்திரம் என்னும் விரல்களால் மேல் கண்ட மும்மலங்களின் குறிக்கோளாக மூன்று வரியாக இடவேண்டும் என்று கூறப்பட்டிருப்பதை அறிந்து, "நீரில்லா நெற்றிபாழ்" என்ற சமயகுரவர் வாக்கை யனுசரித்து நேயர்கள் தத்தம் நெற்றியில் தவறாது விபூதி தரித்தல் நலமன்றோ. தவிர விபூதி என்றால் ஐசுவரியம் என்றும் பொருள். ஆக அச் சின்னத்தைத் தரித்தால் மங்களத்தை யல்லவா கொடுக்கும்.

5 எவனொருவன் சுத்தமான ஆகாரத்தை உட்கொண்டு, அதனின்றும் சுத்த பரிசுத்த சரீரத்தை அடைந்து, சுத்த சாத்வீக நிலையை யடைகிறானோ அவன் தமஸ் (சாவு) என்னும் இருளைத் தாண்டுகின்றான். அவனையே யாவரும் " ஸ்கந்தன் " என்கிறார்கள். (தம் ஸ்கந்த இத்யாசக்ஷதே) என்ற சனத்குமாரர் வாக்குப்படி, நமது அருணகிரியாரும், அவ்வழியைப் பின்பற்றித் தாமும் அந்த இருளின் எல்லையைக் கடந்து விட்டதைக் குறிக்கவோ, அல்லது அவ் வெல்லையைக் கடக்கும் மார்க்கத்தில் ஈடுபட்டிருப்பதின் நிமித்தம் தமக்கும் " ஸ்கந்த பட்டம் " ஸ்தாபித்து விடும் அல்லது ஸ்தாபிதமாக வேண்டும் என்ற கருத்தைக் குறிக்கவோ கந்தரனுபூதி என்ற பெயரிட்டார்—அல்லது

6 " மனிதனே தேவனாகிறான் " என்ற சித்தர்கள் வாக்குப்படி, மானிடராகப் பிறந்த நமது அருணகிரியார், மண், பெண், பொன் இவைகளாலாகிய உலகானுபவம் என்னும் கர்மானுபவத்தை மனித

குறிப்பு :—ஓர் கல்லூரியில் ஆரம்ப வகுப்பு முதல் கடைசி வகுப்பு அல்லது பி. ஏ. வகுப்பு வரையில் உள்ளதாகக் கொள்வோம். அக்கல்லூரியில் எந்த வகுப்பில் படிக்கும்

உலகப் புகழ்பு லம்பு கலியற்று உணர்ச்சிகொண்டு
உன் உரிமைப் புகழ்ப் பகர்ந்து திரிவேனோ

மாணவனுக்கும் தாம் அக் கல்லூரியில் படிப்பதாக கூற உரிமை யுண்டல்லவா. ஆகவே குறிப்பிட்ட கல்லூரியைச் சார்ந்த மாணவன் என்றால் அவன் பி. ஏ. வகுப்பில் படிப்பவன் என்று பொருள் கொள்ளல் அவசியமில்லை. அவ்வாறே நமது அருணகிரியாரும் மேலே கூறப்பட்ட இருளின் எல்லையைத் தாண்டினாலும் தாண்டாவிடிலும், அவர் ஸ்கந்த நிலையையடையும் மார்க்கத்தி லிருப்பதாகக் கருதிக் கூற உரிமை உண்டென்றேற்படுகிறது.

நிலையில் அனுபவித்துப் பிறகு தாம் தெய்வீக நிலையை (Divine State) அடையுங்கால், தமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் யாவும் ஞானானுபவம் என்றுணர்ந்து அவற்றிற் கெல்லாம் காரணன், இவ்வுலகிற்கே பிரதான காரணனாகிய பரமன், அவனே " கந்தன் " என்பதை, ஞானானுபவம் வாய்க்கப் பெறாத ஏனையோருக்கு அறிவுறுத்த வேண்டியோ " கந்தர் அனுபூதி " எனப் பெயரிட்டு உரைக்கலானார்.— அல்லது ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் ஸ்ரீ அகஸ்திய பகவானுக்கு உபதேசம் செய்யுங்கால் கூறியுள்ள மொழிகளைப் பின்பற்றி, அவற்றையே தாமும் வேண்டியும், அம்முறையில் தாம் ஈடுபட்டு அவ்வாறாக முருகனானார், கந்தர் ஆனார், குமரர் ஆனார் என்பதாகவெல்லாம் நேரடியாகக் கூறாமல் அக் கருத்துக்களை அமைத்து அவர் பாடியுள்ள அனுபூதிச் செய்யுள்களினின்றும் உணரக் கிடக்கிறதை அறிவிக்கவே—

உதாரணமாக :—

1 "வாசி என்ற மயில் மீதிலணைந்து நின்று
கருவிகள் பட்டுப் போகக் காத்துக் கந்தனானேன்."
(சு. ஞானம்)

உழலு மது கற்பலக் கழலிணையே னக்களித்து
உனதுதம ரோக்கவைத்து அருள்வாயே.

மயில் தூலத்தில் சுப்பிரமணியக் கடவுளுக்கு வாகன மாகக் குறிப்பிட்டிருந்தாலும், தத்துவ ரீதியில் மயில் என்னும் சொல் சுவாசத்தைக் குறிக்கும். உடலிலுள்ள பிராண நிலையை அறியவே நாடிப் பரிக்ஷை செய்கிருர்கள். வைத்தியர்கள் அகஸ்தியர் குருநாடி சாஸ்திரப்படி, வாத பித்த சிலேட்டுமமாகிய மூன்று நாடிகளின் நடைகளைப் பற்றிக் கூறும்போது, மயிலின் நடையையும் கோழியின் நடையையும் விவரிக்கிருர்—தவிர கையிலுள்ள நாடிக்கும் சுவாசத்திற்கும் சமபந்தமுண்டு என்பது யாவரும் அறிந்ததே. ஆகவே இவ்வடிகளில் வாசியை வசப் படுத்துவதின் மூலம், கருவிகள் (பஞ்சேந்திரியங்கள்) தன்செயலழிந்து சைதன்னிய நிலையை யடைந்தன. ஆனது பற்றியே கந்தர் என்ற பெயர் பெற்றேன் என்று கூறப் பட்டுள்ளது.

அருணகிரியாரும் இதே கருத்தை "கைவாய் கதிர் வேல்', என்ற செய்யுளில் விளக்குகிருர்.

2 வாசியென்ற குதிரை மீதில்
வாயப் பாயேறியந்த மகிமை கண்டேன்.

(சு. ஞானம்)

இதே கருத்தை அருணகிரியார் "ஆடும் பரி" என்ற செய்யுளில் கூறுகிருர்.

3 மூச்சப்பார் மூச்சறற இடமுங் கண்டேன்
முருகனென்ற பேருமாச்சு. (சு. ஞானம்)

அருணகிரியார் இந்தக் கருத்தை "அமரும் பதி கேள்", அதாவது இச்சரீரத்தில் பிராணன் ஒடுங்கும் தலம் எது அதைக் கண்டுகொள், அப்போது தான் முத்திக்கு ஏதுவாகும் என்று குறியாமல் குறிக்கிருர்.

புலன கற்றிடப் பல விதத்தினைப்
புகழ் பலத்தினைத் தர வேணும்.

4 வாழ்ந்திட்டேன் தெய்வசபைக் குறவன் நானும்,
வாலைக்குப் பிள்ளையென்று மதிக்கப் பெற்றேன்.
(சு. ஞானம்)

குமரன் கிரிராஜ குமாரன், முதலிய செய்யுள்களில் இக் கருத்துக்கள் இருக்கின்றன.

என இவ்வாறாக அருணகிரியார் தாமும் வாசிப் பழக்கம் வாய்த்தவர், வாசியோகம் சித்தித்தவர், அமரும் பதியைக் கண்டவர், ஆனதுபற்றியே தாமும் குமர நிலையை யடைந்தவர் என்பதாக வெல்லாம் நேரிடையாகக் குறியாமல் அந்த முருக வசனத்தையே தமது அனுபூதிச் செய்யுட்களுள் கூறியுள்ளதுபற்றி, அவற்றிற்கு கந்தர் அனுபூதி எனப் பெயரிட்டாரோ' எதுவென எமக்கு அறியும் திறம் இல்லை.

ஆனால் கந்தரனுபூதிச் செய்யுட்கட்கு தூல சூக்குமக் கருத்துக்களைக் கவனிக்குமுன் நமது அருணகிரியாரின் மனோநிலை இவ்வனுபூதி இயற்றியகால் எவ்வாறிருந்திருத்தல் கூடும என்பதை உணர்ந்து கவனித்தல் நலம்.

திருப்புகழ் களஞ்சியம் பாடிய பின்னரே இவர் அனுபூதி இயற்றினார் என்று தெரிகிறது. மேலும் சித்து வகுப்பு முதலிய செய்யுட்களிலிருந்து நமது அருணகிரியார் மனிதநிலையைக் கடந்து, தெய்வீக சக்தியின் விசேஷத்தால் தெய்வ நிலையை அடைந்து விட்டார் என்றே தோன்றுகிறது.

சாதாரண கவிகட்கே பல உரைகள் கூறும் பண்டிதர்கள் உளர். மேலும் கம்பர் இயற்றிய ராமாயணக்

பவக்கடலைக் கடக்க இனிக்
குறித்திரு போற் கழற்புணையைத் தருவாயே.

கவிகட்கு உரையை வரையறுக்க இயலாது என்றும் கூறியுள்ளார்கள். அந்நிலையில் நமது பழுத்த சிவயோகி இயற்றிய அநுபூதிச் செய்யுட்கட்கு உரைகள் எத்தனை எத்தனையோ.

எனினும், சிற்சில செய்யுள்களின் கருத்தை, அருண கிரியாரின் இதய நிலையைக் கூடியவரையில் தழுவி, இச் சஞ்சிகை வாயிலாக வெளியிடப் பரமன் அருளட்டும்

முருகாம்பிகனே சரணம்.

அமிர்த கீதம்

(P. S. வரதராஜ ஐயர், கல்கத்தா)

கல்கத்தாவில் ஏராளமான தென் இந்தியர்கள் வசித்து வருகிறார்கள். அவர்களில் T. R. S. மணி ஐயரவர்கள், முருகன் தொண்டில் ஈடுபட்டுத் தம் அமிர்த கீதமான திருப்புகழ் பாட்டுக்களால் பக்தியைப் பரவச் செய்து வருகிறார்கள்.

இத்தகையாருடைய நன்முயற்சியால் 'அமிர்தவசனி' பத்திரிகைக்குக் கல்கத்தாவிலும் சில சந்தாதாரர்கள் சேர்ந்துள்ளார்கள். ஆனால் அபிமானத்துடன் இப்பத்திரி கையை வாசிப்பவர்கள் அதிகம்.

சொற்சுவை, பொருட்சுவை நிறைந்து, பாமரனையும் மகிழ்விக்கும் சக்தி சந்தக்கூபில் ஸ்ரீ அருணகிரிநாத சுவா மிகள் பாடிய அமிர்தகீதமான திருப்புகழில் இருக்கிறது. முருகனது நாமம் நினைக்க இன்பந்தரும்; கூற நாவினிக் கும்; அதைக் கேட்பவரது உள்ளம் கனியும். தமிழ்க்

உரைத்து செய்பதித் தலத்தினைத் துதித்து
உனைத்திருப்புகழ்ப் பகர் வேனே.

கடவுளாகிய அவனது பெருமையைப் போற்றும் தமிழ் நூல்கள் பலவுள. சங்க நூலான திருமுருகாற்றுப்படையென்ன, குமரேச சதகம், கந்தர் கலிவெண்பா, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்முதல், பாமரரும் பாடி மகிழும் அருள் வள்ளலது திருஅருட்பாவிலுள்ள பாடல்கள், காவடிச்சிந்து, கீர்த்தனைகள்வரை எவ்வளவோ இருக்கின்றன. ஆனால் முருகனை முருகனாகவே காட்டி நம்மைப் பரவசப்படுத்தும் அமிர்த கீதமாக அமைந்திருக்கிறது அருள்வாக்கான திருப்புகழ். இது யோகிகளும் அனுக்ரஹம் செய்யும் அற்புதமான நூல்.

தேவேந்திர சங்க வகுப்பின் முதற் பகுதியில் சக்தியின் நரசிம்ம அவதாரமும் அசுரர்கள் தடமணி முடிபொடிதானம்படி செங்கையில் வாள் வாங்கிய சங்கரியின் அவதாரமும் வருணிக்கப்பட்டிருக்கின்றன. அவளது வனப்பு இடைப் பகுதியில் வருணிக்கப்படுகின்றது. அவள் உலகுய்ய ஈன்றெடுத்த திரு முருகன் பெருமையும், அப்பனது அருளைப் பெற்று மொழிபவர்களது பேரின்பமும் கடைப் பகுதியில் விவரிக்கப்படுகின்றன. செய்யுளின் உட்கருத்தை ஆராய்ந்தால் முதற்பகுதியில் அசுரர்களைப்போல சாதகரை வருத்தும் மும்மலங்களையும் தமது கருணைப் பிரவாகத்தால் சக்தி சம்ஹரிப்பது வருணிக்கப்பட்டது. அவள் யோகிக்குப் பிரத்யக்ஷமாகிச் சகல நாடி நரம்புகளிலும் அமிர்த வர்ஷம் செய்து பிரமானந்த சுகம் தருவது "அடியிணை தொழு மவுனிக ளேகாந்த சுகந்தரு பாசாங்குச சுந்தரி'' என்று இடைப்பகுதியிலுள்ள வரிகளில் விவரிக்கப்படுகிறது. "செந்தமிழ் நாலோன் குமரன் குகன்''

வேலு மயில் வாகனப்பிரகாச மதிலே தரித்து
வீடு மதுவே சிறக்க அருள்தாராய்.

ஞானத்தை அனுக்ரஹிக்க அவனை அருள்பட மொழிந்து யோகி முக்தி நிலையெய்துவது செய்யுளின் கடைப்பகுதியில் கூறப்பட்டது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த நூலை ஏன் அமிர்தகீதமென்று அழைக்கலாகாது.

உள்ளம் கவர்கள்வன் (உருவிலே)

(செ. பொ. புவனகிரி.)

இன்றைய உலகில் எல்லோரும் கள்வராகவே இருக்கின்றனர். கள்வன் என்றால் யாரோ ஒருவன் என்று எண்ணுபவர், தானே யோசனை செய்து பார்க்குமளவில் தாமே கள்வர் என்பதை அறிந்துவிடுவர். யாம் எடுத்துக்கொண்டது உள்ளத்தைக் கவர்ச்சி செய்யக்கூடிய கள்வன். யாரையா? அது! உள்ளத்தைக் கவர்ச்சி பண்ணக்கூடிய கள்வன்! வியப்புத்தான். அந்தக் கள்வன் எப்படிப் பட்டவனாயிருக்க வேண்டும்? யாருடைய உளளத்தைக் கவர்கிறான்? ஆணாயிருப்பதனால் பெண்ணின் உளளத்தைக் கவர்பவனாக இருக்க வேண்டும. ஆனால் பொதுவாகவே உள்ளம் கவர் கள்வனாக இருப்பதால் ஆண் பெண் இரு பாலாருடைய உள்ளத்தைக் கவரும் கள்வனாவன் இவன். உள்ளத்தைக் கவர்வதில் அழகு ஒன்றுதான் முதன்மையானது. அப்படி என்றால் உள்ளத்தைக் கவர்ச்சி பண்ணக்கூடிய இத்திருடன் அழகுமிக உடையவன் தானோ? கவர்ச்சி பண்ணுகிறான் இக்கள்வன். இல்லை; கவர்சசி செய்விப்பதற்காக உண்டாக்கப்பட்டவன்

மேவி யான் உனைப் போல் சிந்தையாகவே களித்து ·
உகந்த வேளையா மெனப் பரிந்து அருள்வாயே.

இக் கள்வன். இக் கள்வனைக் கண்டு உள்ளம் பறி கொடுப்பவர் மக்கள். இக்கள்வனுக்கு எழிலைப் படைத்தோன் ஒரு மானிடன். உருவிலே படைக்கிறான். இறைவன் படைத்தான் மனிதனை. மனிதக் கூட்டை மட்டுமல்ல. கூட்டோடு அதனுள் உயிரையும் வைத்தான். அப்படி உண்டாக்கப்பட்ட மனிதன் படைக்கிறான் இறைவனின் கூட்டை. உயிரையும் படைக்கத்தான் பார்த்தான். தியாக வாழ்வினால் முடிந்தது சிலருக்கு. முடியவில்லை பலருக்கு. வாழ்வை ஈடு செய்து, கல்லாக இருந்ததை உயிரோவியம் ஆக்குகிறான் ஓவியன். அச் சிலை சக்தி உள்ளதாகவே இருக்கிறது. அதிலே அவன் திகழ்கிறான். சக்தி திகழ்கிறாள். இல்லை; அது திகழ்கிறது. அந்தச் சக்தி உள்ள ஒன்றுதான், ஒரு உருவம் தான் நம்மைக் கவருகிறது; நம் உள்ளத்தைக் கவருகிறது, கல்லினுள் கடவுள் காட்சி அளிப்பதால்.

உலகியலில் நாம் நமது வாழ்விலேயே இன்றும் காணலாம் நடைமுறையில். மிகுந்த அழகுள்ள ஒருவனை, ஒருத்தி பார்த்த உடன் வியக்கிறாள். பார்ப்பதோடன்றி மனம் பறி கொடுக்கிறாள். அப்படியே நின்றும் விடுவாள். அதே போல் மிகுந்த அழகு மிளிரும் ஒரு பெண்ணைப் பார்த்தளவில் மயங்கி நின்று விடுவான். இது நாம் இன்று உலகில் காணும் காட்சியாகும். உருவைக் கண்டு மயங்கும் நாம், உருவில் உள்ள உண்மைய்க் கண்டால்........கண்டு அதுவேயானால் நம் உள்ளம் எந் நிலையிலிருக்கும்? மனத்தைப் பறி கொடுப்போம். நம் உடல் பூராவிலும் மின்சாரம் பாய்ந்தாற் போன்ற

சித்தினிலாட லோடு முத்தமிழ் வான ரோது,
சித்திர ஞானபாதம் அருள்வாயே.

உணர்ச்சி; ஒரு இன்பம்: அதுவே நீளின்பம், பேரின்பம். அழகு மிக்க ஒரு பெண்ணை, அழகு மிக்க ஒருவன் எதிர் பட்டால் கண்ணொடு கண்ணினை கவ்வும். அப்படியல்ல இது. கண்ணுற கல்லுரு கருத்தினைக் கவ்வும். ஒருவர் உள்ளத்தை அவருக்குத் தெரியாமலே திருடிக் கொண்டால் அவன் திருடன்தானே. திருடன் கள்வன்: உருவினைக் கண்டு உள்ளத்தைப் பறிகொடுப்பவன் சிறிது அழகைக் கண்டு உள்ளம் பறி கொடுப்பவன் மீளா இன்பம், பெரு இன்பம் கொள்வான்.

நம் மனத்திலே அவன் குடி கொண்டான். இல்லை; அவனைப் பற்றிய நினைப்புதான் நம் மனத்திலே குடி கொண்டது. பக்தர்கள்; ஏன்? ஞானியர்கள் அவனைத் தம் மனச் சிறையில் அடைத்து விட்டனர். அடிமையுமாக்கினர். பெரிய உத்தியோக முள்ளவனை, சாதாரண ஒரு மனிதன் தன் கைக்குள் போட்டுக் கொண்டால் அவனது காரியம் யாவினும் வெற்றிதானே அதைப் போல ஞானியர் எடுத்த காரியம் வெற்றியடைவதும். நம்மை அவன் அடிமை கொண்டான். அவனை நமது மனது அடிமை கொள்கிறது.

கவர்ச்சி என்பது என்ன? கவர்தல் கொள்ளையிடல், அடுத்தவர் பொருளை தமதுரிமையாக்கல்; தன் வசப் படுத்துதல். ஆனால் இக்கவர்ச்சியோ வேறுவிதமானது. மனம் பலப் பலவற்றிலும் பிடிவைத்து எண்ணமிடுகிறது. அவ்வவற்றையும் தாவிப்பற்றுகிறது. பற்றிக்கொண்டே போகிறது நல்லதோ? கெட்டதோ? அதைப்பற்றி அக்கரைப் படுவதில்லை. யோசிப்பதில்லை. மரத்திற்கு மரம் தாவும் குரங்குகளைப் போல. குரங்கினை ஒத்தது

அனுகி நம னெற்ற மயல் கொளும் அதிலே சித்தமுற
அவச மோடணைத்தருள வரவேணும்.

மனம். பெரியோர்கள் சொல்லுகிறார்கள் குரங்கு மனம் என்று. அதைக் கவர்ச்சி பண்ணுகிறான் இக்கள்வன். குரங்கினைப் பிடிப்பது போலன்று. மனிதனுள் இயங்கும் மனத்தைக் கவர்கிறான். சக்கையை விட்டு விடுகிறான். கவர்ச்சி என்பது ஆகர்சனம் என்பர் வடநூலார். தான் இடத்திலிருந்தே தன்னுடைய சக்தியால் இழுத்துப் பிடித்தல் கவர்ச்சி. ஆனால் மின்சாரத்தைப் போன்றதன்று. காந்தத்தைப் போன்றது. காய்ச்சிய இரும்பு அதில் ஊற்றப்பட்ட நீரை என்ன செய்யுமோ அதைப் போன்றது மின்சாரம். ஆனால் காந்தம், தன் சக்தியால் தன் வசம் இழுத்து ஒரே நிலையில் நிறுத்தி விடும். பூமியைச் சூரியன் இழுத்துக் கொண்டிருப்பது போல. எனவே அக் கள்வனின் வசத்திலிருந்து கொண்டு அதன் வேலையை நடத்திக்கொண்டு தானிருக்கிறது. கள்வனும் தன் வேலையை நடத்திக் கொண்டுதானிருக்கிறான்.

"தோடுடைய செவியன், விடை யேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசிஎன் உள்ளம் கவர் கள்வன்"

என்று சம்பந்தர் பாடுகிறார். இந்தக் கள்வன் தன் உள்ளத்தைக் கொண்டான் என்று சம்பந்தர் சொல்லுகிறார். இன்னுமொருவர்: காதலாகினார். கசிந்து கண்ணீர் சிந்தினார். இக் கள்வனை எப்பொழுதும் பார்த்துக் கொண்டே யிருப்பதானால் தனக்கு மனிதப் பிறவி வேண்டும் என்கிறார். எது எப்படி யாயினும் கள்வன் என்னும் மெய்ப்பொருள் நம்மைக் கவருகிறது. நம்முளே ஒளிந்திருக்கிறது. அழிதலிலா ஆத்மாவே அந்த மெய்ப்பொருள். அது வாழ்க!

கோளறு விக்கட் டசை பாசனை, பவதுக்கக் காரச் சூதனை
குமுதப் பொற்பாதச் சேவையில் அருள்வாயே.

கந்தர் கலிவெண்பா

(ரசபதி)

எதையும் விரும்பும் மனத்துடன் உறவுகொண்ட ஆன்மா, அம் மனம்போன வழியெல்லாம் போகும். அளவிறந்த வினைகள் அதன் மூலம் பிறக்கும். எண்ணிலா உலகில் எண்ணிலாப் பிறவிகளை அதன் பயனாக எடுக்கும். எடுத்தெடுத்து இளைக்கும்.

தாய் கருவில் வாழ்குழவி

அன்னையின் வயிற்றில் ஆக்கை முழுதும் வுருவான பின்னர், அவ்வுயிர்க்கு முன்னைய உணர்ச்சி முளைக்கும். அதன் பிறகு பின்வருமாறு எண்ணும்.

அளவில் யோனிகளில் பிறந்தேன். அளவில் வினைகளை வளர்த்தேன். அளவில் உலகில் உடலெடுத்தேன். அளவில் துன்பம் அநுபவித்தேன். இறந்தேன். மீட்டும் பிறந்தேன்.

இறப்பிற்கும் பிறப்பிற்கும் மூலம் இச்சை. உலகம் துன்ப மயம்; உலக இச்சை என்னை உலக மயம் செய்தது. உலகம் பற்று மயம்; அதில் உறவுகொண்டு நான் பற்று மயம் ஆனேன். பற்று பிறப்பளித்தது; பிறப்பு துன்பு தந்தது.

பற்றற்றவன் பரமன்; அதனால் பிறப்பிலான், துன்பிலான், இன்பமயன் இறைவன் என்று இயம்புகின்றார் மேலோர். தாய் கருவில் இன்று தங்கியுளன் நான்; பிறந்த பின் உலகில் தற்பரன் தாள்நிழலையே எண்ணுவேன். பற்றிற் படாதபடி தன்னை உணர்வால் பற்றும் என்னைப் பாதுகாக்கும் அந்தப் பரன் என்றெல்லாம் எண்ணியிருக்கும்.

இனித்திற மாந்து வாழும் இருவினை நீண்ட காயம்
ஒரு பிடி சாம்பலாக் விடலாமோ.

ஆகாமியத் தோற்றம்

காலம் வரும். இயற்கையின் கட்டளைப்படி உலகில் உடல் நெருக்குண்டு பிறக்கும். பிறந்தும் சடம் என்னும் காற்று தாக்கும். அவ்வளவில் மறதியடையும். முன்னைய உணர்ச்சியெல்லாம் மூடுண்டு போகும். வுடல் உள்ள போதே உமாசுதனை வழிபட்டால் உய்ய வழி உண்டு. அதற்கு அயலாகும்படி சித்த விருத்தி நேரும். பாழும் அவ்விருத்தி பதினொன்கு.

1. பொன் மணி தானியம் முதலியவைகள் கிடைக்கும் வழி யொன்றையே வேட்டு நிற்கும் **காமம்.**

2. சினத்தையும் போரையும் செறிவிக்கும் **கோபம்.**

3. ஈயாமை மயமாக்கி உள்ளத்தை இரும்பாக்கும் **லோபம்.**

4. முயன்று குவித்த பொருள்மேல் ஆசைமிக்கு நிற்கும் **மோகம்.**

5. நல்வினை தீ வினை சிந்தியாமல் மதி கெடுக்கும் **மதம்.**

6. மாண்பழிக்கும் பொறாமை யென்னும் **மாற்சரியம்**

7. எவரையும் மதியாமையான **இடும்பை**

8. விளம்பலாகாப் பலதிறப்பட்ட **வேட்கை.**

9 தாம் அடைந்த துன்பத்தைப் பிறரும் அடைய என்னும் **ஈரிஷை.**

10. தன் பெருமை தான் எண்ணும் **தர்ப்பம்.**

11. மற்றை மாதர்மேல் மனம் வைக்கும் **இராகம்.**

12. தனக்குத் தீமை விளைவித்தானுக்குத் தான் தீமை விளைவிக்க முயலும் **துவேஷம்.**

13. எவரும் தன்னைப் பாராட்டும் சிந்தனையில் தானம் செய்யும் **டம்பம்.**

கூசப்பிர மாண ப்ரபஞ்ச மாயக்கொடு நோய்கள் அகன்று
கோலக்கழலே பெற இன்று அருள்வாயே.

14. நான் எனும அநியாய முனைப்புடைய அகங்காரம் அந்தோ! இந்த சித்தவிருத்தி பதினொன்கிலிருந்து ஆகாமிய வினை பிறக்கின்றது.

பழைய வினையும் புது வினையும்

தானியம் களஞ்சியத்தில் ததும்பி யுளது. பசிக்குப் புசிக்க, அற்ப பகுதியை அதிலிருந்து எடுப்பர். ஊற வைப்பர். பக்குவ காலத்தில் பண்படுத்திய நிலத்தில் விதைப்பர். விதைதத விதை விரிவாக விளையும். அறுவடை செய்வர். கரைந்த களஞ்சியத்தை நிறைவுறச் செய்வர்; இது கிராம அநுபவம்.

அந்த களஞ்சிய தானியம் போலுளது சஞ்சித கன்மம். அதிலிருந்து பிராரத்துவ புசிப்பிற்கென்று இடையிடை சிறிது சிறிதாக எடுப்பர். எடுக்க எடுக்க களஞ்சிய சஞ்சிதம் கரையும். அடியொடு கரைதற்குள், ஆன்ம கோடிகள் ஆகாமிய விதையை விதைப்பார்கள். விளைந்து நிறைந்த வினைத் தானியங்களையிட்டு சஞ்சித களஞ்சியத்தை நிறைப்பார்கள். குடிகள் பயிர் விளைவு செய்வதுபோல், உயிர்கள் இங்ஙனம் வினை விளைவு செய்கின்றன.

சஞ்சித கன்மத்திலிருந்து பிராரத்த கன்மத்தை யெடுத்தும், அநுபவித்தும், அநுபவிக்கும்போதே ஆகாமிய கன்மங்களை விளைத்தும், கரும்பிருக்க வேம்பை யருந்துவார் போல குற்ற பரம்பரை யாகின்றன உயிர்க் கூட்டம்.

சீவன்முத்தர் நிலை

பிராரத்த வினைகளைத் தெய்வ கட்டளையென்று விரும்பி யேற்று அவைகளை அநுபவித்து, ஆகாமிய வினையை அணுத்துணையும் தேடார்கள் ஞானிகள். அவ்வளவில் அவர்கள் சஞ்சிதம அழியும். பிறப்பும் இறப்பும் வேரற, முருகப் பெருமான் திருவருள் நிழலில் இரண்டறக் கலந்து இன்பங் காண்பர் அப் பெருமக்கள்.

அடர்பச்சை மாவி லருவிற்பெ ருேடு
மடிமைக் குழாமோ டருள்வாயே.

சகலர் நிலை

ஆணவம் கன்மம் மாயை யென்னும் மும்மலத்தாலும் முறைதுறை மறப்பவர் சகலர். இவர்கட்கு வாழ்க்கையில் விளையும் 'ஆகாமிய வினைகள் பிறவிக் கடலாய்ப் பெருகி வரும். நகைப்பார் ஒருபுறம்; அழுவார் மறுபுறம். ஊடு வார் ஒருசார்; உறவாடுவார் மறுசார். துன்பில் துடிப்பார்; இன்பில் அணைப்பார். செல்வத்தில் சிலிர்ப்பார்; வறுமை யில் வாடுவார். நோயில் நொடிவார்; நோய் நுகர்வில தென்பார். இந்நிலையில், உடம்பாடும் எதிர்மறையுமாக வருகிற புண்ணிய பாவப் பயன்களை அநுபவித்தே கழிக்க வேண்டும் ஆன்ம கோடிகள்.

முப்பொருள் நிலை

கடல் வியாபகம்; அதிலுள்ள நீர் வியாத்தி; நீரில் உள்ள உப்பு வியாப்பியம். அதுபோல், கடல் போல்பவர் கடவுள். நீர் போல்வது ஆன்மா. உப்புப் போல்வது மலம். கதிரவன் ஒளிவீசி யிருக்கும் போதே கண்களும், கண்களை மறைத்த இருளும் அநாதி நித்தியமா யிருப்பது போல், வியாபகம் வியாத்தி, வியாப்பியம் மூன்றும் ஒன்றி லொன்று அடங்கியுளது

இதனால், இருள் மலத்தில் உயிர்கள் இருக்கின்றன என்று அறிந்தோம் அநியாய அம்மலந்தான், உயிர்கட் குக் கன்மத்தில் 'விருப்பத்தை யளித்தது'. உயிர்களின் விருப்பத்தை யறிந்த உமையாள் குமரன், தன் இயற்கைக் கருணையினால், விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுமாறு உயிர்கட்குத் தனு கரண புவனங்களைத் தருகின்றான்; அவைகளின் மூலம் ஆர்வங்கொண்ட கன்மங்களை அநு பவிக்கவும் செய்கிறான். அநாதியில் உலகு உண்டான வகை இவ்வகை.

ஆணவத் தொடர்பு

ஆணவத்திற்குப் பல பெயர். அவைகளுள் ஒன்று இருள் மலம் என்பது. இந்த இருள் மலம் உயிர்கட்கு

இயற்கையுமன்று, செயற்கையுமல்ல. இயற்கை யெனில், பாலுக்கு வெண்மையும் கரிக்குக் கருமையும் என்றும் நீங்காமைபோல, இருள் மலம் உயிர்களை விட்டு என்றைக்கும் நீங்காது. செயற்கையெனில் வெள்ளை ஆடையில் அழுக்கேறல் போல வீடு பேற்றிலும் உறவு கொள்ள வரும். ஆதலின் உண்மையில் இரண்டுமன்று. நெல்லின் உமியும், செம்பில் களிம்பும், நீரில் உப்பும் அநாதி தொடங்கி யமைந்தவை; உமியும் களிம்பும் உப்பும் அவைகளிலிருந்து அகலவும் ஒரு காலம் வரும். அவைகளைப் போல உயிர்கட்கு இருள்மலம் அநாதி செயற்கை; அநாதி சையோகம் என்று கூறுவர் ஆனறோர்.

வினை விருப்பு

இருள் மலத்தில் இருந்தாலும் உயிர்கட்கு இயக்கம் உண்டு. வேதாகம விதிகளைப் பின்பற்றினால் வீடு. விலக்கைப் பின்பற்றினால் நரகம். நல்வினை யிருந்தால் விதியைப் பற்றும். தீவினை யிருந்தால் விலக்கைப் பற்றும்; அதன் அதன் வழி வரும் பயனை ஆன்மாக்கள் அடையும். இருவினை விருப்பம் கன்ம மலத்திலிருந்து எழும்.

விருப்பத்தை விமலன் விளைவிக்கவில்லை. அவை உயிர்கட்கே இயற்கையில் உண்டான வேட்கையும் அல்ல. இறைவன் உண்டாக்கிய விருப்பமானால், பாவம் செய்ததை ஏன் என்று தண்டிக்க வழியில்லை. உயிர்களின் விருப்ப மேல் அவைகள் புண்ணிய மிருக்க பாவம் செய்யா.

இருள் மலந்தான் கன்மத்தில் உயிர்கட்கு வேட்கை எழுப்பியது. எழுப்பியதன்றி, கன்மத்தை யறிந்தெடுத்து அது அளிப்பதில்லை. விரும்பிய உயிர்களும், கன்மத்தை யறிந்து எடுத்து அநுபவிக்க முடிவதில்லை. விரும்பப் பெற்ற கன்மமும், உயிர்களிடம் தாமே வந்து சார்வது இல்லை. இவைகளை உணர்ந்த இறைவன், தனது இயற்கைக் கருணையினால் உயிர்களின் கர்மத்திற்குத் தக்க உடல் தந்து, அவ்வுடம்பின் வழி கன்மத்தைப் புணர்த்தி அநுபவிக்க வைக்கின்றான்.

தாயும் சேயும்

குழந்தைக்குப் பாலில் உண்டான விருப்பம் தாய் தந்த விருப்பமானால், அவள் கொடுக்கிற போதெல்லாம் குடிக்கும். சேயின் விருப்பமானால், மாந்த நோய் காலத்தும் அது மறுக்காமல் அருந்த வேண்டும். உண்மையில் பாலில் விருப்பளித்தது பசி. விருப்புளதாக்கிய பசியும், பாலை யறிந்தெடுத்து சேய் பருகுமாறு செய்வதில்லை. விரும்பிய சேயும பாலை யறிந்தெடுத்துப் பருகுவதில்லை விரும்பப்பட்ட பாலும் சேயின் வாயில் வந்து புகுவதில்லை. இந்நிலையைத் தாய் அறிகிறாள். இரக்கம் கொள்கிறாள். பாலைச் சங்கில் பெய்கிறாள். சேயின் வாயில் வைத்துப் புகட்டுகிறாள். இவ்வுதாரணப்படி,

சேய் போலுளது உயிர் ; பசிபோல் உளது இருள் மலம் ; பால்போல் உளது கன்மமலம் ; தாய்போல் உளன் தற்பரன்; சங்குபோல் உளது உடல்

குருடனும் கோலும்

கோல் கொடுத்து ஒருவன் குருடனை யழைத்து வருகிறான். குருடனே கோலை விடான். அது கோல் கொடுத்தவன் இச்சையல்ல ; அங்ஙனமேல், கொடுக்கிற போதெல்லாம் பிடிக்க வேண்டும் ; குருடன் இச்சையானால் எப்போதும் கோல் கொள்ளவேண்டும். உண்மையில் குருடுதான் கோலில் இச்சையைக் கொடுத்தது. இச்சை விளைவித்த குருடோ கோலை யறிந்தெடுத்துக் கொடுப்பதில்லை. விரும்பப் பெற்ற கோலும் தானே வந்து கையில் நிற்பதில்லை. இதை யறிந்த இரக்கமுள்ள ஒருவன் கோலை எடுக்கிறான் ; குருடன் கையில் கொடுக்கிறான் ; குருடன் விருமபிய இடத்தில் கொண்டு சேர்க்கிறான். இவ்வுதாரணப்படி,

குருடனைப் போல் உளது ஆன்மா ; குருடைப் போலுளது ஆணவம், கோல் போல் உளது உடல் ; கோடுத்திழுப்பவன்போல் உளன் இறைவன். செல்லும் இடம் போல் உளது உலகம்.

"இருள்மலத்தால் மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தி யளித்தற்கு மலபாகமுறவே கடைக்கண் பாலித்து" எனும் கலிவெண்பா அடிகள், இங்கு நம் நினைவில் நிழலிடு கின்றன.

பலவகை உடல்கள்

மண்ணாலான பாத்திரங்களைச் செய்வோன், பல வடிவாக அவைகளைப் படைக்கின்றான். தன் நினைவின்படி அமைத்தானேல், அனைத்தையும் ஒரு தோற்றமாகவே தோன்றச் செய்வன். பிறர் நினைவைக் கருதித்தான், பல உருவாக அவைகளைச் செய்கின்றான்.

பாத்திர சிருஷ்டியாளன் போல் உளன் பரமன்; மண்ணைப் போல் உளது மாயை. பாத்திரங்கள் போல் உள உடல்கள். பிறரைப் போல் உளர் உயிர்கள்.

இவ்வுதாரணத்திலிருந்து, உயிர்கள் பெற்றிருக்கும் வேறுபட்ட உடல், அவைகளின் நினைவின்படி யமைந்தவை யென்று அறிகின்றோம் அல்லவா!

நூல் போன அளவு உயர்ந்து, காற்றுப் போனதிசை சாய்ந்து, விண்ணளாவி காற்றாடி விளையாடும். காற்றாடி குத்தும் போது இழுத்துப் பிடித்தால் நூல் அறுந்து விடும். அப்போது நூலைப் பரபர என்று விட்டுவிட வேண்டும். பிறகு நிலைக்கு வந்ததும், விட்ட நூலை இழுத்துக் கொள்ளலாம்

காற்று காற்றாடியை ஆட்டி வைப்பது போல, உயிர்களை ஆட்டிப் படைக்கிறது கன்மம்

வட்டைகள், இலைகள், குடம், உலுவாய், முதலியவற்றுடன் இழுப்பு நிலையில் உருள்கிறது சக்கரம். வண்டி திரும்பு நெறி, விரைவு நெறி, மிருது நடை முதலிய காலமெல்லாம் உருளையெனும் சக்கரம எப்படி யெப்படி உருள்கிறது! ஆ! அதுதான் வாழ்க்கை. விண்ணில் பறக்கின்றது காற்றாடி. மண்ணில் உருள்கிறது சக்கரம் இவைகளைப் போல கன்மத்திற்குத் தக்க உடலெடுத்து உழலுமபடி பிறக்க வைத்து, உணர்வில் ஒளி உதயமாகும் காலம்வரை

தன்னைக் காட்டாதே உயிர்களின் உடனாகிக் கரந்து நிற்கின்றான் அருள் உருவத் திருமுருகன்.

" தீர்வரிய
கன்மத்திற்கு ஈடாய் கறங்கும் சகடமும் போல்
சென்மித்து உழலத் திரோதித்து "

எனும் இந்த இரண்டடிகள், எவ்வளவு விரிவான செய்திகளை நம் நினைவிற் கொணர்கின்றன; நினைத்தாலே நெஞ்சம் நெகிழ்கிறதே. (தொடரும்)

பக்தியும் இசையும்

8வது கர்த்தாவில்	ராகம் :	தந்யாசி	ஆ: ஸகாமபநிஸா
ஜன்யம்	தாளம்:	ஆதி	அ: ஸ்நிதபமகரிஸ

ஒருகளைச் சவுக்கம்

இசை அறிவை அடைந்ததலாகிய பயன் ஈசனை அறிவதற்கேயன்றி இவ்வுலகில் வேண்டாத இன்பங்களைச் சுவைக்க அல்ல என்பதைஅறியவும்.

பல்லவி

3 3 4
ஸங்கீத க்ஞானமு பக்திவினா
3 3 3
ஸன்மார்க்கமு கலதே மனஸா.—ஸ

அனுபல்லவி

4 4
ப்ருங்கி நடேஸ ஸமீரஜ கடஜ
3 3 3
மதங்க நாரதாதுலு உபாஸிஞ்சே—ஸ

சரணம்

3
ந்யாயா ந்யாயமுலுதெலுஸுனு ஜகமுலு
3 3
மாயா மாயமனி தெலுஸுனு துர்குண
3
காயஜாதி ஷட்ரிபுல ஜயிஞ்சே
3
கார்யமு தெலுஸுனு த்யாகராஜுனிகி—ஸ.

கருத்துரை

பக்திவிஞ ஸங்கீத ஞானமு (பக்தியில்லாத இசை அறிவு (அதாவது இசைத் திறத்தின் நுண்ணிய மேன்மையெல்லாம்) ஸன்மார்க்கமு கலதே) உத்தமமான நல்வழியாகவே யாகாது (மனஸா) மனமே (ப்ருங்கி நடேஶ ஸமீரஜ கடஜு மதங்க நாரதாதுலு உபாஸிஞ்சே) ப்ருங்கி மஹரிஷி, நடராஜன், ஆஞ்சனேயன், அகத்தியன், மதங்க மஹரிஷி, நாரதர் முதலான முனிவர்களும் ஸாக்ஷாத் நடராஜனும் கூட ஓதி சேவிக்கின்ற)ஸங்கீதஞானமு பக்திவிஞ) இசைத் திறத்தின் நுண்ணிய பத்தி கலந்த அறிவின் மாக்ஷியின்றி (ஸன்மார்க்க முகலதே மனஸா) மற்றைச் சாதாரண இசை அறிவின் திறமாக்ஷி இவ்வுலக மனிதர்கட்கு எவ்வகையிலும் பயனிலதாகிய நல்வழியல்ல, மனமே.

ஜகமுலு ந்யாய அந்யாயமுலு தெலுஸுனு (உலகங்களுடைய தர்மா அதர்மங்களாகிய செய்கைகள் எனக்குத் தெரியும்) துர்குண மாயா மாயமனி தெலுசுனு (வேண்டப்படாத கெட்ட குணங்களாகிய உலக இயற்கையான மாயையாகிற இருள்நிறைந்த செய்கையும எனக்குத் தெரியும்) மேலும் காயஜாதி ஷட்ரிபுலஜயிஞ்சே கார்யமு தெலுஸுனு (இவ்வுடலின் இயற்கையான குணங்களாகிய காமக்ரோதாதி அறுவகைக் குணங்களை வெல்லும் செய்கையும் எனக்குத் தெரியும், (த்யாகராஜுனிகி ஸங்கீத ஞானமு பக்திவிஞ ஸன்மார்க்கமு கலதே மனஸா) ஆதலால் மனமே தர்மா தர்மங்களைத் தெரிந்தும உலக இயற்கையின் மாயைத் தன்மையும் தெரிந்தும் உடலின் இயற்கையான அறுவகைக் கெட்ட குணங்களைத் தெரிந்தும் நீ இவைகளை ஜெயிக்கும் தன்மைக்கு மிக்க உதவியான ஆண்டவனை அறிந்து அவனே எல்லாம் என்பதை உணர்ந்து அவனிடத்தில் ப்ரேமை கொண்டு பக்தி வசத்தில் அவனைப் பாடி வழிபாடு செய்வதாகிய இசை அறிவே உனக்கு நற்கதியை அளிக்குமேயல்லாது

மற்ற இசை நுணுக்க அறிவின் வித்வத்திறன் யாதும் பயனில என்பதோடு, உனது இசை அறிவானது உலக காரியமானதும் உன்னுடைய உடலின் சேஷ்டைகளான அறுவகைக் குணங்களின் பாப க்ருத்தியத்திற்கும்தான் பயன்படும் ஆதலால் த்யாகராஜனுகிய எனக்கு நீ நான் எண்ணும் பக்தி வழிக்கு அநுசரணையாக இருந்து என்னை கடைத்தேற்றுவதோடு நீயும் பயனுறுவாய் மனமே என்கிறார் த்யாகப் பிரும்மம்.

கருத்துள்ளுரை

முன் தொடர்ச்சியில், இசைக் கலையை, மக்கள் உலகம் அதன் உத்தம மேம்பாட்டை உணராது மனிதனின் மிருக உணர்ச்சிக்குப் பயன்படுத்தி பாழ்படுகின்றான் என்று ஐயர்வாளின் அபிப்ராயத்தைக்கொண்டு விளக்கி இருந்தேன்.

தற்போது இசைக் கலையை எதற்குத்தான் பயன் படுத்த வேண்டும் என்பதையும் ஐயர்வாளின் மாக்ஷிமிக்க அபிப்பிராயத்தைக் கொண்டே விளக்குகிறேன். அன்பர்கள கண்ணுறுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

மக்கள் பிறவியினருள் மிகக் குறைவான எண்ணிக்கை உடையார்க்கே ஆண்டவன் இசை இயற்கை உடைய பிறவியாகச் ஸ்ருஷ்டிக்கின்ருன் என்பது வாதத்திற்கு இடமே இல்லாத அபிப்பிராயம்.

அப்படி இருக்க ஆண்டவன் பெருங் கருணையினுல் கிடைக்கப்பெறற இசை அறிவின் திறத்தை மனிதன் கேவலம் உலகிற்கு இயற்கையான மாயா காரியங்கட்கும் உடலின் இயற்கையான காமக்ரோதாதி காரியங்கட்கும் பயன்படுத்திக் கொள்வானேயாயின் இவனுக்கு கருணையோடு ஆண்டவன் அளித்துள்ள இசை இயற்கையின் தன்மையைப் பாழ்படுத்திக் கொள்வதோடு, பாபமும் ஸம்பாதித்துக்கொண்டு மறுபடியும் இவ்வநித்யமான உலகில் வந்து தோன்றி துன்பப்படவே பயன்படுத்திக் கொள்கிறுன் என்பதே கருத்து.

மற்றும், இவ்விசை இயற்கையின் மேன்மையினால் நமது மதப் பெரியார்கள் அடைந்த உத்தமப் பதவியையும் நாம் கவனிக்க வேண்டும். ப்ருங்கி, நடேஸன், ஆஞ்சனேயன், அகத்தியன், மதங்கர், நாரதர் முதலான முனிவர்களும் நடராஜப் பெருமானும் இவ்விசையின் இயற்கைத் திறனால் எதை அடைய வேண்டுமோ அதை அடைந்து பயனுற்றதையும நாம் கவனிக்க வேண்டியதோடு, தேவலோகத்தவர்கள்கூட இசையை காமாதி காரியங்கட்குப் பயன் படுத்துவார்களேயானால் அவர்களும் அழிவது நிச்சயமான காரியம் என்பதை விளக்கவே (ஜகமுலு மாயா மாய மனிதெலுசுனு என்று தேவலோக முதலான எல்லா உலகங்களிலும் உடலின் சேஷ்டையான பயனிலா காமாதி மோக காரியங்கள் இயற்கையாக உள்ளன என்பதோடு இவை உலக இயற்கை என்பதையும் விளக்கி இதை எவன் ஜயிக்கின்றானோ அவனே இசை இயற்கையை அடைநததலாகிய நற்பயனை அடைகிறான் என்கிறார் த்யாகப்ரும்மம்.

இதனுள் ஒரு மர்மம். அதாவது தேவலோகத்தில் கூட ஊர்வசி, ரம்பை, திலோத்தமை என்கின்ற தேவ கன்னிகைகளாகிய தாசிகளைக்கொண்டு காம நுகர்ச்சிக்கு ஆன காரியங்கட்கு ஆக்கந்தரும் மார்க்கத்தில் ஆடவும் பாடவும செய்வித்து தேவேந்த்ரன் முதலான தேவர்கள் பாழ்படுகின்றார்கள் என்று த்யாகப்ரும்மம் வெறுக்கிறார்.

அதாவது இக் காரியங்களில் ஈடுபட்டு எத்தனையோ பிறவிகட்கு ஆளாகி மறுபடியும் மறுபடியும் உலகங்களில் பிறந்து துன்புறுகிறார்கள் தேவர்களே என்றும் வருந்துகிறார் த்யாகப்ரும்மம்.

ஆகவே இசையானது மனிதன் பாவனமுற்று இனி எவ்வுலகிலும் பிறந்து அல்லலுறுவண்ணம் இவனை நற்கதியுற ஆக்கும் ஸாதனமேயன்றி, கேவலம் மனிதனின் மிருக உணர்ச்சிக்கோ தேவர்களானாலும் அவர்களின் ராஸகேளி விலாசங்கட்கோ உரித்தானதல்ல என்பதே **தெய்வீக இசை அறிவின் தோன்றல் த்யாகப்ரும்மத்தின்** உபதேச

மாகும். ஆதலால் இப்படிப்பட்ட மனிதன் கடைத்தேற மிகவும் சுலபமான மார்க்கமான இசைக் கலையைக் காமாதி காரியமான காரியங்கட்குப் பயன்படுத்தி அதன் வழி வளர்த்து நடந்து கொள்வது, கலை கொலை செய்யப்படுவ தோடு, இக்கலை வளர்ச்சிக்கு (அதாவது நாட்டியம் காம நுகர்ச்சிக்கு அனுகூல சொற்களால் அமைக்கப்பட்ட பாட்டுகள் ஆகிய மனித மிருக உணர்ச்சிக்கு உதவி புரியக் கூடிய வகையில் இசையை வளர்க்க உதவுதல் ஆகிய காரியங்கள்) ஒன்றும் தெரியாத பசு போன்ற தன்மையை உடைய மக்கள் உலகத்தையும் பாழ்படுத்துவதாகும் என்பதே த்யாகப்ரும்மத்தின் அபிப்ராயமும் - அவரைப் பின் பற்றிய எனது தாழ்மையான அபிப்ராயமும் ஆகும்.

முடிவாக மனிதனை ஆண்டவன் பகுத்தறிவுடைய ஜன்மமாகப் படைத்ததின் கருணையே இதற்குத்தான் என்பது நான் சொல்லத் தேவையில்லை என்பதோடு இந்தப் பிறவியிலேதான் இவன் இறைவனை அறிந்து இனிப பிறவி யெய்தா வண்ணம் தன்னைப் பாவனமுறச் செய்துகொள்ளத் தக்க தருணம் என்பதையும் மறந்து மேலும் சுலபத்தில் ஆண்டவனை அறிந்து ஆனந்தமெய்தி பயனுற நல்வழியான இசை வழியை இப்படிப் பக்தி மார்க்கமாகிய ஸன் மார்க்கத்தில் ஈடுபடுத்தி எளிதில் பயனுறுவண்ணம் பாழ் படுத்துவதற்கல்ல என்பதோடு கிடைத்த அருமையான மனிதப் பிறவியையும் நாசமாக்கிக் கொள்கிறார்கள் என்பதே கருத்து.

இசை இருக்கட்டும். மிகவும் கடினமான இரும்பை மனிதன் அறிவின் திறனையால் ஒருகத்தியாகச் செய்கின்றான். அந்த கத்தியை நன்மைக்கும் தீமைக்கும் பயன்படுத்த உதவும். அதாவது அந்த கத்தியைக் கொண்டே தலை தெரிக்க ஓடிய குதிரை கால் தடுமாறி எதிர்மாறாகக் கீழே விழுந்து விடுமாயின் உடனே அதன் உயிர் நீங்காவண்ணம் காப்பாற்றி உயிர் பிச்சை அளிக்க சேணம் முதலான பல தோற்கயிறுகளை அறுத்து உடனே

காப்பாற்றதுமான நற்காரியத்திற்கும் பயன் படுததிக் கொள்ளலாம். மனிதனின் மிருகத் தன்மையான கோபக் குணத்தினல் இவனைப் போன்ற உததமப் பிறவியான மற்ெறாரு மனிதனையும் குத்தி குடலைக் கிழித்து கொல்லுவதற்குமான பாப காரியத்திறகும பயன்படுத்தலாமல்லவா? (இவ்வளவேன் ! டாக்டர்கள் மனிதனுக்கு ஊறு செய்யும் கட்டி முதலானவைகட்கும் மற்றும வயிற்றுள் உள்ள சில ஆகாத வளர்நத உறுப்புகட்கும் கத்தியைக் கொண்டு தானே அறுத்து நன்மை அளிக்கின்றார்கள் அதுபோல் மனிதனின பகுத்தறிவைக் கொண்டு நன்மைக்கு வழி செய்துகொள்ள வேண்டுமேயல்லாது, வீணில் பாழ்படக்கூடாது என்பதேதான் மனிதன் பகுத்தறிவைப் படைத்ததனலாகிய பயன் ஆகும்.

இந்த தத்துவத்தை விளக்கவே த்யாகப்ரும்மம், முன்பு காமாதி காரியங்கட்கு இசையைப் பயன்படுத்தியதை கண்டித்தபோது மிகவும் வருந்தி மனத்துள் கோப முற்று, அதற்குத் தோதான **வருத்த கோபம்** ஆகிய இரண்டு ரஸமும் கலந்த ஆரபிராகத்தில் பேசி, தற்போது இந்த வகையில் இசையைப பயன்படுத்த வேண்டுமென்று கூறும்போது மிகவும **அன்போடு**, மிகவும கனிந்த உள்ளத்தோடு, **தாயின் கருணை** செறிந்த மனத்தோடும், இப்படிப் பயன்படுத்தாவிட்டால் பாழ்படுவார்களே என்று வருந்தியும் இவ்விரண்டு ரஸமும் கலந்த தந்யாசி ராகத்தில் உபதேசித்து அன்போடு பேசுகிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்வதோடு, உலகில் தன்வசமாவதற்கு அன்புரையாகிய இனிய சொல்லால் அன்றி காரியம் சித்தி அடையாதல்லவா. அந்த இலக்கண வாயிலாக எபபடியும் மனித இனம் பயனடைய வேண்டுமென்று த்யாகப்ரம்மம் உபதேசிக்கிறார்.

"நெட்டு இருப்புப்பாறைக்கு நெக்குவிடாப்பாறை
வேருக்கு நெக்குவிடும் அல்லவா. [பசுமரத்தின்
அந்த உபாயப் பண்புதான் இம்மார்க்கம்.